# சங்கரன்கோவில் நகராட்சி

**2023ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதி வெள்ளிகிழமை பிற்பகல் 04.00 மணிக்கு நடைபெற உள்ள நகர்மன்ற அவசரக்கூட்ட நிகழ்ச்சி நிரல் :–**

பொருள் எண் – 1

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் நான்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் உள்ளது. இதன் மூலம் சுமார் 65.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக குழாய்கள் பாதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும்போது குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீரழுத்தம் காரணமாக குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகும். சூழ்நிலை ஏற்படுகிறது. குடிநீர் அவசியத்தை கருத்திற்கொண்டு விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யப்பட வேண்டும். இதற்காக ஆறு மாத கால பராமரிப்பிற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 2

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் 69 எண்ணம் சிறுமின்விசை மோட்டார் பம்புகள் இயக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த சிறுமின்விசை மோட்டார் பம்புகளின் மூலம் பெறப்படும் நீரைக்கொண்டு பொதுமக்கள் தங்களின் பிற தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இந்த மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் காரணமாக பொதுமக்கள் குடிநீருக்காக மிகவும் சிரமப்படுகின்றனர். இதனை கருத்திற்கொண்டு ஆறு மாத காலத்திற்கு மோட்டார் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 3

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் 269 எண்ணம் அடிபம்புகள் உள்ளது. இவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள் காரணமாக பொதுமக்களின் பிற தேவைகளுக்கு குடிநீர் பிரச்சினை ஏற்படுகிறது. இதனை சரிசெய்யும் பொருட்டு பழுதுகளை சரிசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காக ஆறு மாத காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 4

சங்கரன்கோவில் நகராட்சி கீழ்கண்ட இடங்களில் மின்வாரியத்தின் மூலம் தெருக்களின் நடுவே மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளது, இதனால் பொதுமக்கள் மற்றும் வாகனங்களுக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை அருகில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத இடத்தில் மாற்றம் செய்வதற்கு மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. பாட்டத்துரர் 2ம் தெரு 2. பாட்டத்துரர் 1ம் தெரு 3. காந்தி நகர் 4ம் தெரு 4. காந்தி நகர் கீழ 3ம் தெரு 5. ஜவராஜா நகர் மெயின் தெரு- 2எண்ணம் 6. கணபதி நகர் 2ம் தெரு 7. பி,எஸ் நகர் 3ம் தெரு 8..பி,எஸ் நகர் மெயின் தெரு 9.கக்கன் நகர் 2ம் தெரு 10.கக்கன் நகர் 3ம் தெரு 11 .சங்கர் நகர் 2ம் தெரு

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 5

சங்கரன்கோவில் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு நிதியின் கீழ் பாட்டத்தூரில் கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடம் கட்டும் பணியில் கட்டிடத்தை முழுமையாக முடிக்கும் பொருட்டு மின்சார பணிகள், பிளம்பிங் பணிகள், பெயிண்டிங் பணிகள் ஆகிய பணிகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் பயன்பாட்டினை கருத்திற்கொண்டு இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 6

சங்கரன்கோவில் நகராட்சி கீழ்கண்ட இடங்களில் அங்கன்வாடி மையம் மற்றும் மினி பம்ப் அறை இடிந்து விழும் நிலையில் உள்ளது அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் நலன் கருதி மேற்படி கட்டிடங்களை இடிக்கவும் மற்றும் தெருக்களில் அமைந்துள்ள மினி பம்ப் அறை இடிந்து விழும் நிலையில் உபயோகமற்று உள்ளதால் மேற்படி கட்டிடங்களை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | இராமசாமியாபுரம் 2ம் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்ப் ரூம் இடிக்கும் பணி | 0.15 |
| 2 | இராமசாமியாபுரம் 3ம் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்ப் ரூம் இடிக்கும் பணி | 0.15 |
| 3 | பேருந்து நிலையத்தில் உள்ள சிறுமின்விசை பம்ப் ரூம் இடிக்கும் பணி | 0.15 |
| 4 | இரயில்வேபீடர் சாலையில் உள்ள அங்கன்வாடி மையம் இடிக்கும் பணி | 0.50 |
| 5 | சங்கர் நகரில் உள்ள அங்கன்வாடி மையம் இடிக்கும் | 0.50 |

| | | |
|---|---|---|
| | பணி | |
| 6 | சிவந்திவாசலில் உள்ள அங்கன்வாடி மையம் இடிக்கும் பணி | 0.50 |
| 7 | வடக்கு ரதவீதி யில் உள்ள சிறுமின்விசை பம்ப் ரூம் இடிக்கும் பணி | 0.15 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் மற்றும் கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் – 7**

சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண்.11இல் இராமசாமியாபுரம் 2ம் தெருவில் சிறுமின்விசை பம்ப் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் மற்றும் கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் – மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் – 8**

15வது மத்திய நிதிக்குழு மான்யம் Untied Grant 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/CFC-1 நாள் 07.03.2023இன்படி கீழ்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .

| வ. எண் | சாலைகளின் விபரம் | மதீப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | கோமதியாபுரம் 7வது தெரு (143013R169) கான்கீரிட் சாலை மறுசீரமைப்பு | 12.00 |
| 2 | இராமசாமியாபுரம் 6வது தெரு (143013R176) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 7.50 |
| 3 | தேனப்பப்புரம் 1வது கிழக்கு தெரு (143014L002) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 2.00 |
| 4 | புதுமனை 2வது மேற்கு தெரு (143015L003) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 2.50 |
| 5 | புதுமனை புதுத்தெரு (143015L004) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 4.00 |
| 6 | புதுமனை 3வது குட்டித்தெரு (143015L005) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 3.00 |
| 7 | கக்கன் நகர் 6வது தெரு (143017R214) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 7.00 |

| | | |
|---|---|---|
| 8 | சங்குபுரம் 3வது தெரு (143012R164) பேவர் பிளாக் சாலை மறுசீரமைப்பு | 15.00 |
| 9 | காந்தி நகர் 1வது தெரு (143027S063) கான்கீரிட் சாலை மறுசீரமைப்பு | 15.00 |
| 10 | பாட்டத்தூர் 3வது தெரு (143030R341) கான்கீரிட் சாலை மறுசீரமைப்பு | 5.00 |
| **மொத்தம்** | | **73.00** |

அலுவலகக்குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் – மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்** – 9

**சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண் 27 காந்திநகர் நகராட்சிநடுநிலைப்பள்ளியில் பயின்றுவரும் மாணவர்களுக்கு தண்ணீர் வசதி இன்றி மிகவும் சிரமமாக உள்ளதாகவும் எனவே மாணவர்களின் நலன் கருதி தண்ணீர் வசதி செய்யும் வகையில் புதிதாக ஆழ் துணை கிணறு அமைத்து தண்ணீர் வசதி எற்படுத்திட ரூ.1.00 இட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதீப்பட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,**

அலுவலகக்குறிப்பு –

1.மன்றம் அனுமதிக்கலாம்,

2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்** – 10

**சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண்.30இல் பாட்டத்தூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் புதிய சமையலறை கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலக குறிப்பு

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்** – 11

**சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக குழாயில் ஏற்படும் பழுதுகள், சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகள், அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை**

மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள்30.01.2023 இல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள 15.03.2023இல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்த்தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.பி.சிவா<br>ஒப்பந்ததாரர் | ரூ.900000/- | -- | 0.02% |
| 2. | திரு.கார்த்தீசன்<br>ஒப்பந்ததாரர் | ரூ.900000/- | 0.38% | -- |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.பி.சிவா மதிப்பீட்டுத்தொகையைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.சிவா ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. சிறுமின்விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்த்தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | திரு.பி.சிவா<br>ஒப்பந்ததாரர் | ரூ.600000/- | -- | 0.02% |
| 2. | திரு.கார்த்தீசன்<br>ஒப்பந்ததாரர் | ரூ.600000/- | 0.38% | -- |

மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.பி.சிவா மதிப்பீட்டுத்தொகையைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.சிவா ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | மதிப்பீட்த்தொகையைவிட | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு.பி.சிவா<br>ஒப்பந்ததாரர் | ரூ.600000/- | -- | 0.02% |
| 2. | திரு.கார்த்தீசன்<br>ஒப்பந்ததாரர் | ரூ.600000/- | 0.38% | -- |

**மேற்கண்ட பணியை மேற்கொள்ள வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.பி.சிவா மதிப்பீட்டுத்தொகையைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.சிவா ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.**

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 12**

2022-2023ம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் (Namakku Naame Tittam 2022-2023) திட்டத்தின் கீழ் சங்கரன்கோவில் நகராட்சிக்கு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 8880-2/2022/பி1 நாள்: 06.03.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) | அரசு நிதி (ரூ. இலட்சத்தில் ) | பொதுமக்கள் பங்குத்தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1. | பாலாஜி நகர் 1ம் தெரு ( Unicode-143023R0273, 2ம் தெரு Unicode-143023R275) தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைத்தல் காமராஜ் நகர் புது 3ம் தெரு (143029R322) மற்றும் காமராஜ் நகர் 3ம் தெரு விரிவாக்க பகுதி (143029R362) | 45.00 | 30.00 | 15.00 |
| | **மொத்தம்** | 45.00 | 30.00 | 15.00 |

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 13

சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தலைவரின் பயன்பாட்டிற்கு கணினி பிரிண்டர் UPS கணினி மேஜை Modem ஆகியவை புதிதாக வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.120000 / க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 14

சங்கரன்கோவில் நகராட்சி பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம், நாமக்கு நாமே திட்டம், தூய்மை இந்திய திட்டம் 2.0, தேசிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் மேற்படி திட்டங்கள் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு பொறியியல் கல்லூரி மூலம் பரிசோதனை செய்தமைக்கு உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 15

சங்கரன்கோவில் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை கீழ் நுண்உர மையங்களில் உள்ள மக்கும் குப்பைகளை அரைக்கும் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்பட்டு விடுகிறது இதனால் குப்பை அரைக்க இயலமுடியாமல் உள்ளது, எனவே மேற்படி இயத்திரத்தை பழுது நீக்கம் செய்வதற்கு உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் – 16**

**சங்கரன்கோவில் நகராட்சி வார்டு எண்.27 காந்திநகர் 2ம் தெருவில் உள்ள கிணற்றில் அசுத்தம் செய்யப்படுவதால் கிணற்றினை தூர்வாரி அப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு கிணற்றிலுள்ள தண்ணீரினை விநியோகம் செய்வதற்கு ரூ. 4.90 தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 17**

சங்கரன்கோவில் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 76Y 8811 **டிராக்டர் மற்றும்** TN 76Y **8820 டிரைலர்** வாகனத்திற்கு தகுதிச்சான்று 16.04.2023-ல் முடிவடைவதால் மீண்டும் தகுதிச்சான்று பெறவும் பழுது **நீக்க** வேலைகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் பழுது நீக்கம் பணிகள் செய்ய பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

(கோப்பு எண்.0272/2023/எச்1)

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 18**

இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் படி மக்கும் குப்பை சேகரிக்கப்பட்டு பசுமை நுண்ணுயிர் உரக்குடில் முலம் உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது.,இதனை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.என்.3088/2022/ நாள் 23.02.2023ன் படி இயற்கை உரம் “**செழிப்பு**“ என்ற பெயரில் விற்பனை செய்திட வேளாண்மை துறையில் பதிவு செய்து உரிமம் பெறவும் மற்றும் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்தினை அரசு அங்கீகாரம் பெற்ற பரிசோதனை நிலையங்களில் தர பரிசோதனை மேற்கொள்ளவும் அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 19**

இந்நகராட்சி பகுதிகளில் கசடு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது, வட்டார வளர்ச்சி அலுவலர் மேலநீலிதநல்லூர் அவர்கள் கடிதம்: ஆ1/2865/2022 நாள் 01.03.2022ன் படி மேலநீலிதநல்லூர் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட 8 கிராமங்களில் உள்ள 2955 வீடுகளில் சேகரிக்கப்படும் நச்சு கழிவுகளை இந்நகராட்சி கசடு மேலாண்மை நிலையத்தில் கொட்டுவதற்கும் அதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் மோற்கோள்ளவும் அதற்கான செலவினங்களை விதிமுறைகளின் படி பகிர்ந்துகொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 20**

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான பொருட்கள் விநியோகம் செய்ய அட்டவணையின் படி கீழ்கண்ட பொருட்கள் விநியோகம் செய்வதற்கு 07.12.2022ந் தேதியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | விநியோகம் செய்ய வேண்டிய பொருள்கள் | எண்ணம்/லிட்டர் | மாடசாமி ஒப்பந்தகாரர் | ராஜாமுகம்மது ஒப்பந்தகாரர் |
|---|---|---|---|---|
| 1 | காலணிகள் | 1 எண்ணம் | ரூ.148 | ரூ.156 |
| 2 | ஷூக்கள் | 1 எண்ணம் | ரூ.925 | ரூ.970 |
| 3 | சுண்ணாம்பு | 1 கிலோ | ரூ.8 | ரூ.9.50 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. மாடசாமி ஒப்பந்தகாரர் குறைந்த மதிப்பீடு தொகை கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட ஒப்பந்தகாரர் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது

(கோப்பு எண்-2440/2022/எச்)

**தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் – 21**

**தூய்மை** இந்தியா திட்டத்தின் கீழ் சங்கரன்கோவில் நகராட்சியின் 30 வார்டுகளையும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக (ODF++) அறிவிப்பதற்கு மத்திய அரசின் நகர்புற வளர்ச்சித்துறை தெரிவித்த நிபந்தனைகளின் படி சங்கரன்கோவில் நகராட்சியின் 30 வார்டுகளையும் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி நாள் 06.02.2023ன்பெற்று திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக அறிவித்துள்ள படி பொதுமக்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் 15 நாட்களில் இந்நகராட்சி அலுவலகத்தில் தெரிவிக்கும்படி 14.02.2023 அன்று தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் இதுநாள் வரை

பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணை ஏதும் வரவில்லை .எனவே இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 30 வார்களையும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக (ODF++) ஆக உறுதி செய்து அறிவிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 22

சங்கரன்கோவில் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் கணிணி குடிநீர் கோப்புகளில் பல வருடங்களுக்கு முன்பு துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்புகள் மற்றும் இரட்டைப்பதிவு வசூல் செய்யாமல் நிலுவையில் உள்ளது. பணி மேற்பார்வையாளர், குழாய் பொருத்துநர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் ஆகியோர்கள் குழுவாக சென்று களஆய்வு மேற்கொண்டதில் துண்டிப்பு செய்யப்பட்ட மற்றும் இரட்டைப்பதிவு கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி எண்ணிக்கைக்கான நிலுவை கேட்பு ரூ,1334863/- வசூலிக்க இயலாது எனவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். எனவே மேற்படி குடிநீர் வரி பல வருடங்களுக்கு முன்பு துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்புகள் மற்றும் இரட்டைப்பதிவு சீர்படுத்தும் பொருட்டு வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்களால் வசூலிக்க இயலாது எனவும் தற்போது துண்டிப்பு மற்றும் இரட்டைப்பதிவு கேட்பு எண்ணிக்கைக்கான ரூ,1334863/- கணிணி குடிநீர் கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 23

சங்கரன்கோவில் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் கணிணி தொழில்வரி கோப்புகளில் பல வருடங்களுக்கு முன்பு தொழிலை நிறுத்திவிட்டு வெளியூர் சென்றும் மற்றும் கடைகளை வீடுகளாகவும் மாற்றம் செய்துள்ளனர். மேலும் சில தொழில்வரி விதிப்புகள் வசூல் செய்யப்படாமலும் உள்ளநிலையில் வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்களால் குழுவாக சென்று களஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கள ஆய்வு செய்யப்பட்டுள்ளபடி வசூல் செய்ய இயலாமல் உள்ள தொழில்வரி விதிப்புகளை நிரந்தரமாக கணினியில் நீக்கம் செய்ய நிலுவை கேட்பு ரூ,2316277/- வசூலிக்க இயலாது எனவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். எனவே இந்நகரட்சியில் தொழில்வரி விதிப்புகளை சீர்படுத்தும் பொருட்டு தற்போதுள்ளபடி தொழில்நடத்தி வரும் நிறுவனங்கள், வணிக கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு புதிதாக தொழில்வரி நிர்ணயம் செய்து

நகராட்சியின் வருவாயை பெருக்க வாய்ப்புள்ளதால் மேற்படி கேட்புகனள் அனைத்தும் 1994ம் ஆண்டு முதல் வசூலிக்க இயலாமல் உள்ள தொழில்வரி வரிவிதிப்புகள் அதற்கான கேட்பு தொகை ரூ,2316277 கணிணி கேட்பில் இருந்த நிரந்தரமாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு - மன்றம் அனுமதிக்கலாம் ,
தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 24

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்23 மேலரதவீதி தெருவிற்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் பாரத் சஞ்சார் நிகாம் தொலைதொடர்பு (பி.எஸ். என். எல்.)நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டது தெடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிமன்றத்தில் வழக்கு எண் CMP (MD)NO 2637of 2023 ன்படி தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சியின் சார்பாக திரு. P.T.திரவியம் அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ,9500 வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண் – 25

சங்கரன்கோவில் நகராட்சியில் திருவேங்கடம் சாலை தினசரி சந்தை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நகராட்சி ஆணையாளர் அவர்களை மூன்றாம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை நீதிமன்றத்தில் வழக்கு எண் WP(MD)NO 4863 of 2023 ன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது மேற்படி வழக்கிற்கு எதிர் வழக்காட P.T.திரவியம் அரசு வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யவும் இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ,9500 வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
தீர்மானம் மன்றம் அனுமதிக்கப்பட்டது.

இடம் – சங்கரன்கோவில்
நாள் – 20 .01.2023.

நகர்மன்றத் தலைவர்
சங்கரன்கோவில்.